ஸ்ரீ ஸத்குரு துணை

ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

# ஸத்குரு
# ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்
# நாற்பத்தி ஆறாவது ஆராதனை விழா



## அழைப்பிதழ்

**2019, டிசம்பர் 28 முதல் 2020, ஜனவரி 13 வரை**

ॐ

ஸ்ரீ ஸத்குரு துணை

ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

# ஸத்குரு
# ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்

## நாற்பத்தி ஆறாவது
## ஆராதனை விழா

மந்தஸ்மிதமுகாம்போஜம் மஹனீயகுணார்ணவம்
மதுராபாஷிணம் சாந்தம் ஸர்வபூததயாபரம்!
பக்தவாத்ஸல்யஜலதிம் பரமானந்தவிக்ரஹம்
ஞானானந்தம் ப்ரபன்னோஸ்மி நிர்மலஞானஸித்தயே!!
ஓம் ஞானானந்தம்! ஞானானந்தம்! ஞானானந்தம்!

கன்னட தேசத்தில் மங்களாபுரியில் அவதரித்த ஸத்குருமூர்த்தி, அதிபால்யத்திலேயே சத்திநிபாதமுற்று குடும்பத்தை விட்டு விலகி, ஆதிசங்கரர் நிறுவிய ஜோதிர் மடத்தின் பீடாதிபதி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ சிவரத்னகிரி ஸ்வாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு, அவர் மறைவுக்குப்பின் அந்த பீடத்தைத் துறந்து இமயமலையின் பனிக்குகைகளில் நெடுங்காலம் கடுந்தவமியற்றி, பாரதம் முழுவதும், நேபாளம், பர்மா, இலங்கை முதலிய ஏனைய நாடுகளிலும் பாதயாத்திரையாக சஞ்சாரம் செய்து, கடைசியில் சென்ற நூற்றாண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள ஆட்டையாம்பட்டி கிராமத்திலும், விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூருக்கு அருகில் வியாக்ரபாதரும் மற்ற சித்தர்களும் வாழ்ந்த புராதன ஸ்தலமாகிய சித்தலிங்கமடத்திலும் தங்கி அருளாட்சி புரிந்து, சுமார் 66 ஆண்டுகளுக்கு முன்பு திருக்கோவிலூரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் திருவண்ணாமலை செல்லும் நெடுஞ்சாலையில் சித்தர்கள் பலர் வாழ்ந்து அருளாசி வழங்கி அடங்கிய தக்ஷிண பினாகினி என்னும் தென்பெண்ணை நதியின் வடகரையில் ஸ்ரீ ரகோத்தம ஸ்வாமிகளின் மூல பிருந்தாவனத்திற்கருகிலும், பார் புகழும் மார்க்கண்டேயரைப் பெற்ற மிருகண்டு முனிவரின் தவச்சாலையாய் விளங்கிய புனிதமான இடத்தில், ஸ்ரீ ஞானானந்த தபோவனம் என்னும் அத்யாத்ம வித்யாலயமாம் ஆஸ்ரமத்தை நிறுவினார்கள் ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்.

காலக் கணக்குக்கு அடங்காத நீண்ட நெடுவாழ்வு வாழ்ந்த இந்த மாபெரும் ஞானசித்தர் ஸஹஜ சமாதியில் வீற்றிருந்து பக்தர்களுள் பரமபக்தராய், யோகியருள் கனிந்த யோகியாய், ஞானிகளுள் நிறைஞானியாய், குருவிற் சிறந்த குருபரனாய், கற்பகத் தருவாய், கருணைக் கடலாய், எண்ணற்ற

ஜீவ கோடிகளுக்கு இடைவிடாது அருளாரமுதம் பொழியும் தெய்வமாய், அவ்யாஜ கருணாமூர்த்தியாய்த் திகழ்ந்து **1974**-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மஹா ஸமாதியடைந்தார்கள்.

அதிஷ்டானத்தில் அமர்ந்து அன்றுபோல் இன்றும் பக்தர்களுக்கு அனுக்ரஹித்துவரும் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் நாற்பத்தி ஆறாவது ஆண்டு ஆராதனை விழா விகாரி வருஷம் மார்கழி மாதம் **28**-ஆம் தேதி **(12.01.2020)** ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண பக்ஷம் துவிதியை அன்று தபோவனத்தில் அவரது திருவருளை முன்னிட்டு சிறப்பாக நடைபெற இருக்கிறது.

**28-12-2019**ல் தொடங்கும் இவ்விழாவில் தினசரி பாத பூஜைகளுடன் ஸ்ரீ மஹாகணபதி ஹோமம், மஹாருத்ர ஹோமம், ஸ்ரீ பகவதிஸேவை, லக்ஷார்ச்சனை, முருகன் காவடி, சதுர்வேத பாராயணம், சங்கர பாஷ்ய பாராயணம், சிவாகமம், ஸ்ரீமத் ராமாயணம், தேவி பாகவதம் பாராயணம், சூர்ய நமஸ்காரம், நவக்ரஹ ஹோமம், அகண்டதாரா நாம ஜபம், ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் ஸ்ரீமத் பாகவத பிரவசனம் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஜப யக்ஞம், ஸ்ரீ சுதர்சன ஹோமம், நவசண்டி ஹோமம், ஸ்ரீவித்யா ஹோமம், ஆவஹந்தி ஹோமம், 108 கலச க்ஷீராபிஷேகம், ஸ்ரீ ஸூக்த ஹோமம், ஸஹஸ்ர சங்காபிஷேகம், பஜனைகள் பின்வரும் நிகழ்ச்சி நிரல்படி இடம்பெறுகின்றன. பன்னிரு திருமுறை, திவ்விய பிரபந்த பாராயணம், ஓதுவார்களின் தேவார இன்னிசையும் நடைபெறும்.

பஜனை, உபன்யாசம், நாம ஸங்கீர்த்தனம், இசைக் கச்சேரிகள் 2019, டிசம்பர் 28 முதல் 31 வரை மற்றும் 2020, ஜனவரி 1,2 & 11, 12 ஆகிய தினங்களில் நடைபெறும்.

ஆராதனை தினமாகிய **12.01.2020** ஞாயிற்றுக்கிழமையன்று மிகவும் விசேஷமான பாதபூஜை, அதிஷ்டானத்தில் சிறப்பான அபிஷேக பூஜை, லக்ஷார்ச்சனை பூர்த்தி, ஆராதனை, தீர்த்த நாராயண பூஜை ஆகியவை நடைபெற இருக்கின்றன.

இப்பெரும் விழாவில் அன்பர்கள் அனைவரும் பங்குகொண்டு ஸத்குருநாதரின் பேரருளுக்குப் பாத்திரமாகி, பிறவிப்பயன் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**டிரஸ்டிகள்**
ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

**20-11-2019**

சித்தலிங்கமடம் ஸத்குருநாதரின் ஆஸ்ரமத்தில்
09.01.2020 முதல் ஆராதனை தினம் 12.01.2020 வரை
அன்னதானமும், பஜனையும் நடைபெறும்.

# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 28-12-2019<br>சனி | காலை 5.00 | மூர்த்திகள் வழிபாடு, கணபதி ஹோமம்,<br>பாதபூஜையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பம் |
| | இரவு 7.00 | இசை அஞ்சலி:<br>கலைமாமணி Dr. ஸ்ரீராம் பரசுராம் &<br>ஸ்ரீமதி. அனுராதா ஸ்ரீராம் |
| 29.12.2019<br>ஞாயிறு | காலை 5.30 | கிருஷ்ண யஜுர்வேத பாராயணம்<br>மஹாருத்ர ஜபம் மஹா சங்கல்பத்துடன்<br>ஆரம்பம் (ஆராதனை வரை நடைபெறும்) |
| | இரவு 7.00 | 'குரு அருள்' – ஸ்ரீ பாலு ஸ்வாமிகள் |
| | இரவு 8.00 | நாமசங்கீர்த்தனம் : செல்வி அதிதி ஆனந்த் &<br>செல்வி ஸ்ரீநிதி ஆனந்த், அபுதாபி சகோதரிகள் |
| 30.12.2019<br>திங்கள் | காலை 5.30 | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம் |
| | இரவு 7.00 | நாமசங்கீர்த்தனம் : செங்கோட்டை ஸ்ரீ ஹரி பாகவதர் |
| 31.12.2019<br>செவ்வாய் | காலை 6.00 | ஸ்ரீ ஸ்ரீவித்யா கடஸ்தாபனம், ஸ்ரீ சண்டி பாராயணம்,<br>ஸ்ரீ நவாவர்ண பூஜா (பௌர்ணமி வரை)<br>அதிஷ்டானத்தில் லக்ஷார்ச்சனை ஆரம்பம் (ஆராதனை<br>முடியும் வரை மஹன்யாசமும், ஏகாதசருத்ர ஜபமும்,<br>லக்ஷார்ச்சனையும் தொடர்ந்து நடைபெறும்) |
| | இரவு 7.00 | தேவாரம் & திருப்புகழ்: ஸ்ரீ சம்பந்தம் குருக்கள் |
| 01.01.2020<br>புதன் | காலை 7.30 | முருகன் காவடி உற்சவம் |
| | இரவு 7.00 | சங்கீத சமர்பணம்: பாட்டு - கர்நாடிக் சகோதரர்கள்<br>மெண்டோலின் : ஸ்ரீ U. ராஜேஷ்<br>வீணை : ஸ்ரீமதி. நிர்மலா ராஜசேகர்<br>மிருதங்கம் : தஞ்சாவூர் ஸ்ரீ K. முருகபூபதி<br>தபேலா : ஸ்ரீ பிரவீன் நாராயணசாமி<br>மோர்சிங் : ஸ்ரீ சுந்தர் |
| 02.01.2020<br>வியாழன் | இரவு 7.00 | நாமசங்கீர்த்தனம் :<br>ஈரோடு ஸ்ரீ இராஜாமணி பாகவதர் |
| 03.01.2020<br>வெள்ளி | காலை 6.00 | ஸ்ரீ சண்டீ கடஸ்தாபனம்<br>சுக்ல யஜுர் வேதம், ரிக், சாம வேதம், தேவி பாகவதம்,<br>சங்கர பாஷ்யம், சிவாகமம், ஸ்ரீமத் ராமாயணம்<br>பாராயணங்கள் ஆரம்பம் (9 தினங்கள் நடைபெறும்) |
| | மாலை 6.00 | ஸ்ரீ பகவதி சேவை<br>அகண்டதார ராம நாம ஜபம் ஆரம்பம் |
| 04.01.2020<br>சனி | மாலை 6.00 | அகண்டதார ராம நாம ஜபம் பூர்த்தி |
| | இரவு 7.30 - 9.30 | ஸ்ரீமத் பாகவத மஹாத்மியம் ப்ரவசனம்<br>ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள், பரனூர் |

| | | |
|---|---|---|
| 05.01.2020<br>ஞாயிறு<br>முதல்<br>10.01.2020<br>வெள்ளி வரை<br>&<br>11.01.2020<br>சனி | காலை 6.00 - 11.00<br><br>மாலை 3.00 - 5.00<br>&<br>இரவு 7.30 - 9.30<br><br>மாலை 3.00 - 5.00 | ஸ்ரீமத் பாகவதம் மூலபாராயணம்<br><br>ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ<br>பிரவசனம்<br><br>ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்,<br>பரனூர் |
| 05.01.2020<br>ஞாயிறு | காலை 6.00<br><br>காலை 8.00 | சூர்ய நமஸ்காரம்<br><br>ஸ்ரீ நவக்ரஹ ஹோமம்,<br>விசேஷ நவக்ரஹ அபிஷேகம் |
| 06.01.2020<br>திங்கள்<br>வைகுண்ட ஏகாதசி | காலை 10.00 | ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம<br>ஜபயக்ஞம் |
| 08.01.2020<br>புதன் | காலை 8.00 | ஸ்ரீ சுதர்சன ஹோமம் |
| 09.01.2020<br>வியாழன் | காலை 6.00 - 10.30<br><br>காலை 8.30 -<br>மதியம் 1.00 | ஸ்ரீ மஹாருத்ர ஹோமம்<br><br>ஸ்ரீ நவசண்டி ஹோமம் |
| 10.01.2020<br>வெள்ளி<br>(பௌர்ணமி) | காலை 6.30<br><br><br><br>மாலை 5.00 | ஸ்ரீ ஸூக்த ஹோமம்,<br>ஸ்ரீ ஆவஹந்தி ஹோமம்<br>ஆருத்ரா தரிசனம்,<br>நடராஜர் அபிஷேகம், ஊடல் உற்சவம்<br><br>மணிமண்டபம் ஸத்குருநாதர்<br>சன்னிதியில் மஹா அபிஷேகம்<br>ஸ்ரீ வித்யா ஹோமம் |
| 11.01.2020<br>சனி | காலை 8.00<br><br>இரவு 8.00 | அதிஷ்டானத்தில் 108 கலச<br>க்ஷீராபிஷேகம்,<br>ஸஹஸ்ர சங்காபிஷேகம்<br><br>பக்தி பாடல்கள் : தபோவனம் பக்தர்கள் |
| ஆராதனை<br>12.01.2020<br>ஞாயிறு<br>துவிதியை | காலை 5.30<br><br>காலை 10.15 -<br>மதியம் 1.30<br><br>இரவு 7.30 - 9.30 | விசேஷ பாதபூஜை,<br>லக்ஷார்ச்சனை பூர்த்தி,<br>விசேஷ அதிஷ்டான பூஜை<br><br>ஆராதனை<br>தீர்த்த நாராயண பூஜை<br><br>நாமசங்கீர்த்தனம்:<br>ஸ்ரீ விட்டல் வினோத் பாகவதர் |
| 13.01.2020<br>திங்கள் | காலை 10.00 | விடையாற்றி உற்சவம் |



ஸ்ரீ ஸத்குரு துணை

# ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

# ஜயந்தி விழா அழைப்பிதழ்

ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் ஜயந்தி விழா நிகழும் விகாரி வருஷம் தை மாதம் 21ஆம் தேதி (03.02.2020) திங்கள்கிழமை தைக்கிருத்திகை தினத்தன்று ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் சிறப்பாக மூர்த்திகள் வழிபாடு, பாதபூஜை, அதிஷ்டான பூஜை, பஜனைகள், ஸத்குருநாதரின் திருஉருவப்படம் புறப்பாடு, மணிமண்டபம் ஸத்குருநாதர் சன்னிதியில் மஹா அபிஷேகம் முதலான நிகழ்ச்சிகளுடன் நடைபெறும். அன்றைய தினம் விசேஷ அன்னதானமும் நடைபெறும். அன்பர்கள் யாவரும் கலந்துகொண்டு குருவருளைப் பெற்றுய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| 02.02.2020 இரவு 7.00:<br>ஞாயிறு | நாம சங்கீர்த்தனம் —<br>ஸ்ரீ கார்த்திக் ஞானேஷ்வர் பாகவதர் |

ஸ்ரீ ஞானானந்த தபோவனம், 20-11-2019 — டிரஸ்டிகள்

1. பூஜை, ஹோமம், ஆராதனை செலவுகளுக்கு நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள் **"ஸத்குரு ஸ்வாமி ஸ்ரீ ஞானானந்தகிரி மெமோரியல் டிரஸ்ட்"** பெயரில் அனுப்ப கேட்டுக்கொள்கிறோம்.
2. அன்னதானத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள் **"ஜி.தபோவனம் ஸ்ரீ ஞானானந்தா டிரஸ்ட்"** பெயரில் அனுப்ப கேட்டுக் கொள்கிறோம். அன்னதானத்திற்கான நன்கொடைக்கு வருமான வரிவிலக்கு (80G) உண்டு.
3. பூஜைகள் மற்றும் நன்கொடை online-ல் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. www.gnanananda.org என்கிற பக்கத்தில் online pooja booking-ஐ தேர்வு செய்யவும். கட்டணங்கள் இந்திய ரூபாயில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.
4. நன்கொடைகள் வங்கி cheque / demand draft மூலமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். **மேலே குறிப்பிட்ட டிரஸ்டுகளைத் தவிர நன்கொடைகள் தனி நபர்களுக்கோ, மற்ற டிரஸ்டுகளுக்கோ அனுப்புதல் தவிர்க்கவும்.**

**Please send your e-mail ID to office@gnanananda.org**

## ஸ்ரீ ஞானானந்த தபோவனம்


தபோவனம் - 605 756, விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.

Phone: (04153) 224214, 225175
Mobile: +91 7598365175

e-mail: *office@gnanananda.org*
For Poojas: *poojas@gnanananda.org*
Website: *www.gnanananda.org*


| | | |
|---|---|---|
| ஆசிரம நேரம் : | 4.00 am to 12.00 noon - 4.30 pm to 8.00 pm | |
| அலுவலக நேரம் : | 6.00 am to 12.00 noon - 4.00 pm to 9.00 pm | |